JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//214 /2016 |
| | : | Prosecution P.W -- 6 |
| NAME | : | கார்த்திகா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 14.08.2025.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2015ம் தேதி நான் புளியங்குடி அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்த போது அன்றைய தினம் இரவு 7.23 மணியளவில் கண்ணம்மாள், க/பெ. ராமர், கற்பக நாச்சியம்மன்கோவில் தெரு, மேலத்திருவேட்ட நல்லூரிலிருந்து அவருடைய அம்மா அரசம்மாள் என்பவர் அவரை சிகிச்சைக்கு என்னிடம் அழைத்து வந்தார். அவரை விசாரித்த போது 22.08.2015ம் தேதி மாலை 04.30 மணியளவில் திருவேட்டநல்லூர் தோப்பில் வைத்து தெரிந்த நபர் அரிவாளால் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்து பார்த்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயம் காணப்பட்டன.

1. சிதைந்த காயம் இடது மார்பில் 4x2x1 cm அளவில் காணப்பட்டது

2. இடது கையில் சிதைந்த காயம் 6x2x1 cm அளவில் காணப்பட்டது

3. வலது மணிக்கட்டில் சிதைந்த காயம் 3x2x0.5 cm அளவில் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு காயம்பட்ட இடங்களில்

எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அவரை மருத்துவமனையில் இருந்து 02.09.2015ம் தேதி சிகிச்சையில் இருந்து விடுவித்தேன். **மேற்படி கண்ணம்மாள் என்பவரின் காயச்சான்று அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__

சீரான கூர்முனை உடைய அரிவாள், வாள் போன்ற ஆயுதங்களால் தாக்கும் போது வெட்டு காயம் தான் ஏற்படும் என்றால் வெட்டு காயம் ஏற்படலாம், அதிகமான தாக்குதல் இருந்தால் சிதைந்த காயமும் ஏற்படலாம். ஒழுங்கற்ற கூர்முனை உடைய கற்கள், முள்வேலி ஆகியவற்றில் பலமாக மோதும் போது சிதைந்த காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். கண்ணம்மாளுக்கு ஏற்பட்ட காயமும் அவ்வாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அரிவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கினால் ஒரு நபர் சட்டை போட்டிருந்தால் சட்டையும் வெட்டபட்டிருக்கும் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்போ, பின்போ கூட மேற்படி காயங்கள் ஏற்படலாம் என்றால் ஏற்படலாம். கண்ணம்மாளுக்கு மட்டும் தான் நான் சிகிச்சை அளித்தேன் என்றாலும் அரசம்மாளுக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும் சரிதான். போலிஸ் விசாரணையில் அரசம்மாளுக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கியதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இது குறித்து போலிஸ் என்னிடம் கேட்கும் போது அரசம்மாளுக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi